1994 ஜனவரி 5]

(ஆ) குன்னூர் அருகே மரப்பாலம் என்ற இடத்தில் 1.5 கி.மீ. சாலை அழிந்துவிட்டதால் ஏற்பட்டுள்ள பாதிப்பு.

மாண்புமிகு பேரவை தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. எச்.எம். ராஜு, டாக்டர் எம். கருப்புசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. எச்.எம். ராஜு இருக்கையில் இல்லை. டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம், குன்னூர் அருகே மரப்பாலம் என்ற இடத்தில் 1.5 கி.மீ. சாலை அழிந்துவிட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

1993-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2-வது வாரத்தில் ஏற்பட்ட அதிக மழையின் காரணமாக நீலகிரி மாவட்டம் குன்னூர் அருகே மரப்பாலம் என்னும் இடத்தில் நாகப்பட்டினம்–கூடலூர்–மைசூர் சாலையில் (மாநில நெடுஞ்சாலை) கி.மீ. 407/2 முதல் 408/4 வரையில் உள்ள பகுதியில் கொண்டை ஊசி வளைவுகள் எண் 12 மற்றும் 13 ஆகியவற்றுக்கு இடையே உள்ள சாலை சரிந்து விழுந்து போக்குவரத்து முற்றிலுமாக செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனை மிக விரைந்து சரி செய்யும் பொருட்டு, அரசு ஆணை எண் 1651 பொதுப்பணித்துறை, நாள் 25-11-1993-ன்படி தற்காலிக பழுதுபார்த்தல் வேலையை மத்திய எல்லை பாதுகாப்பு படை குழுவினரிடம் ரூ. 68.50 லட்சங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு, இந்த வேலை 1-12-1993-ம் நாள் அன்று துவங்கப்பட்டு மிகவும் துரிதமாக நடைபெற்று வருகிறது. மண் சரிவு முற்றிலும் அகற்றப்பட்டு தற்காலிகப் பயனுக்கான "பெய்லி பாலம்" அமைக்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. தற்பொழுது உள்ள செயல் திட்டத்தின்படி 15-1-1994-ம் நாள் அன்று மேற்படி சாலை போக்குவரத்திற்கு திறந்துவிடப்படும்.

மேற்படி சாலையில் சுமார் 1.20 கி.மீ. அழிந்துவிட்ட காரணத்தால், ஊட்டிக்கு செல்லும் போக்குவரத்து மேட்டுப்பாளையத்தில் இருந்து கோத்தகிரிக்கு செல்லும் சாலை வழியாக திருப்பி விடப்பட்டுள்ளது.

டாக்டர் எம். கருப்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 11-11-1993 அன்று ஏற்பட்ட மிகக் கொடூரமான நிலச் சரிவில் சுமார் 40 மில்லியன் டன் அளவுள்ள மண் சரிந்து மிகப் பெரிய பாதிப்பு

ஏற்படுத்தியுள்ளது. மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் உடனடியாக அந்த இடத்தை நேரடியாகப் பார்வையிட்டு, சாலை சரியாக இன்னும் 2, 3 ஆண்டுகளாகும் என்று பலர் கூறிக்கொண்டிருந்த போதும் அவர்கள் வாயை அடைக்கும் வகையில் இந்தப் பொங்கலுக்குள் அந்தச் சாலை சரி செய்யப்பட்டு, போக்குவரத்து தொடங்கும் என்று கூறியதோடு, அதைச் செயலாற்றுவதற்கு நீலகிரி மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால் அந்தத் தற்காலிகச் சாலை அமைத்துக்கொண்டிருக்கும் அந்த இடத்தில் மிகப்பெரிய இராட்சச பாறை ஒன்று விழும் நிலையிலுள்ளது. அந்தப் பாறை விழாதிருப்பதற்கு என்னென்ன தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது என்பதையும், அதேபோல அந்த மேட்டுப்பாளையம்-ஊட்டி சாலையில் பல்வேறிடங்களில் 2, 3 அடி அகலத்திற்கும், ஒரு பர்லாங் நீளத்திற்கும் 5 அடி ஆழத்திற்கும் சாலைகள் இறங்கியுள்ளன. அதற்கு என்ன என்ன வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11.25

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2-வது வாரத்தில் ஏற்பட்ட மழையின் காரணமாக குன்னூர் அருகே மரப்பாலம் என்னும் இடத்தில் ஏற்பட்ட நிலச்சரிவினை ஒட்டி நம்முடைய மாண்புமிகு இதயதெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உடனடியாக அந்தப் பகுதிக்குச் சென்று, பார்வையிட்டு பார்டர் ரோட்ஸ் ஆர்கனைசேஷன் என்று சொல்லப்படுகின்ற நிறுவனத்தோடு தொடர்பு கொண்டு, மத்திய அரசினுடைய அனுமதிபெற்று, பாதுகாப்புத் துறையிடத்திலேயும் உடனடியாக அனுமதி பெற்று, அந்தப் பணியைத் தொடங்க வேண்டுமென்று 25-11-1993 அன்று அந்த வேலையை ஒப்படைத்தார்கள். அதற்குரிய தொகையான 68 இலட்சம் ரூபாயும் ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் 1-12-1993 முதல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. வருகிற பொங்கலுக்குள் அந்தப் பாதையைப் போக்குவரத்திற்குச் சரிசெய்ய வேண்டுமென்று, போர்க்கால அடிப்படையில் அந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எந்த ஆட்சிக் காலத்திலும் இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை ஏற்பட்டபோது, இதுமாதிரி ஒரு நிவாரண நடவடிக்கையை மேற்கொண்டதில்லை என்ற அளவுக்கு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, போர்க்கால அடிப்படையில் அப்பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதி மக்கள் அப்பணியை பாராட்டுகிறார்கள். போக்குவரத்திற்கு வேறு பாதை சீர்செய்யப்பட்டு, திருப்பிவிடப்பட்டிருக்கிறது. வருகிற பொங்கலுக்குள் அந்தக் குறிப்பிட்ட பாதையைச் சரிசெய்ய

வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில், அந்தப் பணிகள் முடிக்கப்பட்டு, போக்குவரத்திற்கு வசதி செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம், பள்ளிகொண்டா-பலமனேரி சாலையில் பாலாற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்பு. திரு. கி.. தருமலிங்கம், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை,. மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார். திரு. கி. தருமலிங்கம்.

திரு. கி. தருமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வட ஆற்காடு-அம்பேத்கார் மாவட்டம் அணைக்கட்டுத் தொகுதி, பள்ளிகொண்டா-பலமனேரி சாலையில் பாலாற்றின் குறுக்கே உள்ள தரைப்பாலம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

பள்ளிகொண்டா-பலமனேரி சாலை நெடுஞ்சாலைத் துறையால் பராமரிக்கப்பட்டுவரும் ஓர் அரசு பெரிய மாவட்ட சாலையாகும். இச்சாலை கி.மீ. 1/4-8-ல் பாலாறு 534 மீட்டர் நீர்வழிப்பாதை அகலத்துடன் குறுக்கிடுகிறது. இவ்விடத்தில் தற்போது வெட்டுப்பாதைகள் பரத்தப்பட்ட ஒரு தரைமட்ட தாம்போகி அமைந்துள்ளது. மழைக்காலங்களில் இந்த தரைமட்ட தாம்போகி பழுதடைந்து போக்குவரத்திற்கு உபயோகப்படாமல் போகின்றது. போக்குவரத்தும் தடைப்பட்டுவிடுகின்றது. எனவே இவ்விடத்தில் ஓர் உயர்மட்டப் பாலம் கட்டவேண்டியது அவசியமாகும். இவ்விடத்தில் ஓர் உயர்மட்டப் பாலம் அமைக்க சுமார் ரூ. 400 இலட்சங்கள் தேவைப்படும். இவ்விடத்தில் உயர்மட்ட பாலம் கட்டும் பணி மைய அரசிற்கு பரிந்துரைக்கப்பட்ட மைய சாலைநிதி திட்டப் பிரேரேபணையில் முதல் பணியாக இடம்பெற்று உள்ளது. மைய அரசு ஒப்புதல் இன்னும் கிடைக்கப் பெறவில்லை. மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெற்றவுடன் இப்பாலம் கட்டும்பணி செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.